# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

| தரம் : 10 | கர்நாடக சங்கீதம் I | நேரம் - 3 மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண் ........................................

**கவனிக்க:-**

(i) எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.

(ii) *1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.*

(iii) *உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி இடுக.*

1. லலித கலைகளில் மேன்மையானது.
   1. சங்கீதம் 2. சித்திரம் 3. நாடகம் 4. நடனம்

2. கண்டஜாதி அடதாளத்தின் அங்கங்கள்.
   1. $1_5$ 0 0 2. $1_5$ $1_5$ 0 0 3. $1_7$ $1_7$ 0 0 4. $1_5$ 0 $1_5$ $1_5$

3. பிலஹரி இராகத்தின் ஆரோகண அவரோகணம்.
   1. ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ 2. ஸகமபநிஸ் ஸ்நிதபமகரிஸ 3. ஸரிமபதஸ் ஸ்நிதபமகரி ஸ 4. ஸரிகபதஸ் ஸ்நிதபமகரிஸ

4. மெட்டுக்கள் காணப்படும் இசைக்கருவி.
   1. வயலின் 2. தம்பூரா 3. வீணை 4. புல்லாங்கழல்

5. “சிறையாரும் மடக்கிளியே” என்ற தேவாரத்ததை அருளியவர்.
   1. அப்பர் 2. சம்பந்தர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

6. தோடி இராகத்தின் மேள எண்.
   1. 15 2. 65 3. 8 4. 9

7. “பழம்பஞ்சுரம்” பண் குறிக்கம் இராகம்
   1. மாயாமாளவகௌளை 2. மத்தியமாவதி 3. தோடி 4. சங்கராபரணம்

8. தற்போது வழக்கிலுள்ள பண்கள்
   1. 24 2. 12 3. 72. 4. 16

9. ஸாமகானம் பாடப்பட்ட இராகம்
   1. மாயாமாளவகௌளை 2. கரஹரப்பிரியா 3. தோடி 4. சங்கராபரணம்

10. வர்ணத்தின் பூர்வாங்கம்
    1. பல்லவி, சரணம்,அனுபல்லவி 3. பல்லவி,அனுபல்லவி,சிட்டைஸ்வரம்
    2. பல்லவி,அனுபல்லவி,முத்தாயிஸ்வரம் 4. சரணம்,சிட்டைஸ்வரம்


kalvi.lk

11. "முகரந்திரம்" காணப்படும் இசைக்கலவி.
    1. வயலின் 2. தம்பூரா 3. வீணை 4. புல்லாங்குழல்

12. "ருத்ர- மா" என்ற இராகம்
    1. கல்யாணி 2. கரஹரப்பிரியா 3. தோடி 4. சங்கராபரணம்

13. பேரின்பப் பதங்களை இயற்றிங்வர்.
    1. திருஞானசம்பந்தர் 3. கோபாலகிருஸ்ணபாரதியார்
    2. அப்பர் 4. முத்துத்தாண்டவர்

14. ரிரிமம / பப / நிநி // என்ற ஸ்வரப் பகுதிக்கு வரும் சாகித்தியம்
    1. அமரர் பணியும் 3. பாவார் பொருளே
    2. உமை மணவாளா 4. தீவினை யாவும்

15. "முருகா" வர்ணம் அமைந்தள்ள இராகம்
    1. மாயாமாளவகௌளை 2. தோடி 3. மத்தியமாவதி 4. கல்யாணி

16. ஆனந்தபைரவி இராகத்தில் பாடப்படும் உரப்படி.
    1. திருவாசகம் 2. திருவிசைப்பா 3. திருத்தாண்டகம் 4. புராணம்

17. அப்பியாசகான உரப்படி.
    1. கீர்த்தனை 2. தில்லானா 3. ஜதீஸ்வரம் 4. ஜாவளி

18. "இனி நமக்கொரு கவலை" என்ற கீர்த்தனையை இயற்றியவர்.
    1. மயூரம் வேதநாயகம் பிள்ளை 3. முத்தத்தாண்மவர்
    2. கோபாலகிருஸ்ண பாரதியார் 4. புரந்தரதாஸர்

19. "மாதர் மடப்பிடியும்" என்ற பதிகத்தை அருளியவர்.
    1. அப்பர் 2. சம்பந்தர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

20. சங்கீதத்தில் ஏற்பட்ட இரு பிரிவுகள் பற்றிய குறிப்பு முதன்முதலாக காணப்பட்ட நூல்.
    1. சங்கிரக சூடாமணி 3. கர்நாடக சங்கீத புஸ்தகம்
    2. திருமுறைகள் 4. சங்கீதஸுதாகரம்

21. ஸா,கரீகா;மபதா,பமா,காரீஸ என்ற ஸ்வரக் கோர்வையின் மாத்திரைகள்.
    1. 22 2. 23 3. 24 4. 25

22. வாத்யதிரயத்தில் மூன்றாவதாக இடம்பெறுவது.
    1. மிருதங்கம் 2. வீணை 3. புல்லாங்குழல் 4. தவில்

23. அன்னிய ஸ்வரங்களை எடுத்துக்கொள்ளும் இராகம்.
    1. உபாங்கம் 2. வர்ஜம் 3. வக்ரம் 4. பாஷாங்கம்

24. "சந்தப் பாவலர்" என்றழைகப்படுபவர்.
    1. ஆன்னமாச்சாரியார் 3. அருணகிரிநாதர்
    2. தாளப்பாக்கம் சின்னையா 4. முத்துத்தாண்டவர்

25. திஸ்ர நடையின் ஜதி
    1. தகதகிட 2. தகதிமி 3. தகிட 4. திமிதக

26. எல்லா ஸ்வரங்களும் தீவிர ஸ்வரங்களாக அமைந்த இராகம்
    1. மாயாமாளவகௌளை 2. கல்யாணி 3. தோடி 4. சங்கராபரணம்


kalvi.lk

27. நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படி.
1.கீர்த்தனை 2. பதவர்ணம் 3. கீதம் 4. க்ருதி

28. திரயாங்கம் வரும் தாளம்
1. துருவம் 2. மட்டியம் 3. ரூபகம் 4. ஜெம்பை

29. நாயக, நாயகி பாவம் கொண்ட உருப்படி.
1.கீதம் 2. பதவர்ணம் 3. கீர்த்தனை 4. பதம்

30. வில்லிசையில் வாசிக்கப்படும் இசைக்கருவி.
1. விற்கடம் 2. வயலின் 3. தவில் 4. தபேலா

31. எல்லா ஸ்வரங்களும் கோமள ஸ்வரங்களாக வரும் இராகம்.
1. தோடி 2. சங்கராபரணம் 3. கல்யாணி 4. மாயாமாளவகௌளை

32. “விசித்திர சித்த” என்ற விருதினைப் பெற்றவர்.
1. முத்துத்தாண்டவர் 3. புரந்தரதாசர்
2. மகேந்திரவர்மன் 4. கோபாலகிருஸ்ணபாரதியார்

33. ஸரீகா / ஸாரிகா / மா / மா // இவ்வலங்காரத்தின் ஆறாவது வரி
1. ஸ்நீதா / ஸ்ாநிதா / பா / பா //
2. பதாநீ / பாதநீ / ஸ்ா / ஸ்ா //
3. நிதாபா / நீதபா / மா / மா //
4. மகாரீ / மாகரீ / ஸா / ஸா //

34. பஞ்ச புராணங்களில் திருவாசகத்தின் பின் பாடப்படுவது.
1. தேவாரம் 2. திருப்புகழ் 3. திருப்பல்லாண்டு 4.திருவிசைப்பா

35. பாஷாங்க இராகம்
1. பிலகரி 2. மோகனம் 3. கம்ஸத்வனி 4. ஆரபி

36. ஆதி தாளத்தின் அட்சரங்கள்
1. 7 2. 8 3. 6 4. 3

37. “உற்றுமை சேர்வது” என்ற பதிகம் பாடப்பட்ட தலம்.
1 சீர்காழி 2. கோணேஸ்வரம் 3. திருப்பிரம்மபுரம் 4. தோணிபுரம்

38. நிஷாதாந்திய இராகம்
1. குறிஞ்சி 2. நவரோஜ் 3. நாதநாமக்கிரியை 4. கமாஸ்

39. அங்க வித்தியாசமில்லாத உருப்படி.
1. கீதம் 2. கீர்த்தனை 3. புதம். 4.தில்லானா

40. பண்ணியம் என்பது.
1. ஔடவம் 2. ஸ்வராந்தரம் 3. வர்ஜம் 4. ஷாடவம்

(40x01= 40 பள்ளிகள்)


kalvi.lk

**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019**

| தரம் : 10 | கர்நாடக சங்கீதம் II | நேரம் - 3 மணித்தியாலங்கள் |
|---|---|---|

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. பொதுப் பண் ஒன்று தருக.
2. மத்தியமாவதி இராகத்தின் தாய் இராகம் எது?
3. 35,175,108 தாளங்களின் அமைப்புக்களில் பாடல்களை அருளியவர் யார்?
4. முத்துத்தாண்டவர் பாடிய முதல் உருப்படி எது?
5. தமிழ் நாட்டில் கலை வளம் பெற்று விளங்கிய காலம் எது?
6. அப்பியாச கானத்திற்கும் சபா கானத்திற்கும் பொதுவாக வரும் உருப்படி எது?
7. மேளகர்த்தா இராகங்கள் எத்தனை?
8. திருத்தாண்டகம் பாடப்படும் இராகம் ?
9. கீதத்தின் வகைகள் எவை?
10. மகேந்திர வர்மன் பெற்ற விருதுகள் இரண்டு தருக.

[1+1+1+1+1+1+1+1+2+12= 12 புள்ளிகள்]

2) பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு பின்வரும் விடயங்களின் அடிப்படையில் விரிவான இட்சணம் தருக.

1. 22 வது மேள இராகம்
2. ருத்ர மா
3. எல்லா ஸ்வரங்களும் கோமள ஸ்வரம்

(மேள எண், ஆரோகண,அவரோகணம், ஸ்வரஸ்தானங்கள், விசேட அம்சங்கள், உருப்படிகள், சஞ்சாரம்)

[1+1+3+3+2+2 = 12 புள்ளிகள்]

3)

1. தாளத்தந்திகள் உள்ள வாத்தியத்தியம் எது?
2. அவ் வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக்குறிப்பிடுக
3. இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்கி சுருதி சேர்க்கும் முறையினைக்குறிப்பிடுக.
4. இவ் வாத்தியத்தின் சிறப்புக்கள் நான்கு எழுதுக
5. இவ் வாத்தியத்தினை வாசித்து பிரபல்யம் பெற்ற வித்துவான்கள் இருவரின் பெயர்களைத் தருக.

(1+3+4+2+2+= 12 புள்ளிகள்)


kalvi.lk

4) முத்துத்தாண்டவரின் வாழ்க்கை வரலாற்றினையும் இவரது இசைப்பணியையும் பின்வரும் விடயங்களின் கீழ் எழுதுக

1. வாழ்க்கைக் காலம்
2. பிறந்த இடம்
3. இளமைக்காலம்
4. வாழ்க்கைச்சம்பவங்கள்
5. இவர் இயற்றிய உருப்படிகள் நான்கு
6. இவரது உருப்படிகளின் சிறப்புக்கள் இரண்டு

( 1+1+2+4+2+2+= 12 புள்ளிகள் )

5) பின்வரும் உருப்படியின் இலட்சணத்தை விரிவாக எழுதுக.
(அமைப்பு, வகை, உதாரணங்கள், இயற்றியவர் குற்ப்பிடப்படல் வேண்டும்)

1. வர்ணம்

( 12 புள்ளிகள் )

6)

1. பண்களின் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றிற்கு ஓவ்வோர் உதாரணம் தருக.
2. பின்வரும் இராகங்களுக்கு இணையான பண்களைக் குறிபிடுக.
   அ) மாயாமாளவகௌளை
   ஆ) மத்தியமாவதி
   இ) யதுகுலகாம்போதி
3. பண்ணிசையின் தோற்றம். வளர்ச்சி பற்றி விளக்குக.

(3+3+6= 12 புள்ளிகள்)

7) இந்தியாவில் 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகளில் இசை வளர்ச்சி பற்றி நீர் கற்ற விடயங்களைத் தொகுத்து எழுதுக?

அல்லது

நீர் கற்ற ஆதிதாள வர்ணமொன்றின் பூர்வாங்கப்பகுதியை ஸ்வரசாகித்திய தாள அங்க அடையாளங்களுடன் எழுதுக?

( 12 புள்ளிகள் )



kalvi.lk

**மாகாணக் கல்வித்திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019**
**கர்நாடகசங்கீதம்**
**தரம் - 10**

**புள்ளித்திட்டம்**

## பகுதி 1

1. சங்கீதம் (1)
2. $1_5$ $1_5$ 0 0 (2)
3. ஸரிகபதஸ் ஸ்நிதபமகரிஸ (4)
4. வீணை (3)
5. சம்பந்தர் (2)
6. 8 (3)
7. சங்கராபரணம் (4)
8. 24 (1)
9. கரஹரப்பிரியா (2)
10. பல்லவி,அனுபல்லவி,முத்தாயிஸ்வரம் (2)
11. புல்லாங்குழல் (4)
12. கல்யாணி (1)
13. முத்துத்தாண்டவர் (4)
14. அமரர் பணியும் (1)
15. மத்தியமாவதி (3)
16. திருவிசைப்பா (2)
17. ஜதீஸ்வரம் (3)
18. மயூரம் வேதநாயகம் பிள்ளை (1)
19. சம்பந்தர் (2)
20. சங்கீதஸுதாகரம் (4)
21. 24 (3)
22. மிருதங்கம் (1)
23. பாஷாங்கம் (4)
24. அருணகிரிநாதர் (3)
25. தகிட (3)
26. கல்யாணி (2)
27. பதவர்ணம் (2)
28. ஜம்பை (4)
29. பதம் (4)
30. விற்கடம் (1)
31. தோடி (3)
32. மகேந்திரவர்மன் (2)
33. ஸ்நீதா/ஸாநிதா/பா/பா// (1)
34. திருவிசைப்பா (4)
35. பிலகரி (1)
36. 8 (2)
37. திருப்பிரம்மபுரம் (3)
38. நாதநாமக்கிரியை (3)
39. கீதம் (1)
40. ஷாடவம் (4)

(40x01= 40 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

## பகுதி 11

1) 1. செந்துருத்தி அல்லது செவ்வழி

2. கரஹரப்பிரியா

3. அருணகிரிநாதர்

4. "பூலோக கயிலாச கிரி சிதம்பரமல்லால் புவனத்தில் வேறும் உண்டோ"

5. பல்லவர் காலம்

6. வர்ணம்

7. 72

8. கரிஹராம்போஜி

9. 1.சஞ்சாரி கீதம் / சாதரண கீதம் / சாமான்ய கீதம்
   2.இலட்சண கீதம்

10. விசித்திர சித்த, சங்கீர்ண

[1+1+1+1+1+1+1+1+2+12= 12 புள்ளிகள்]

2) 1.ஹரகரப்பிரியா 2. கல்யாணி 3. தோடி

1. மேள எண் குறிப்பிட்டிருப்பின்
2. ஆரோகண அவரோகணம் குறிப்பிட்டிருப்பின்
3. ஸ்வரஸ்தானங்கள் ஒழுங்காகக் குறிப்பிட்டிருப்பின்
4. விசேட அம்சங்கள் குறிப்பிட்டிருப்பின்
5. உருப்படிகள் குறிப்பிட்டிருப்பின்
6.சஞ்சாரம் குறிப்பிட்டிருப்பின்

( 1+1+2+4+2+2 = 12 புள்ளிகள் )

3)

1. வீணை - 1 புள்ளி
2. படம் வரைந்து பாகங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் - 3 புள்ளிகள்
   (படம் - 1 புள்ளி பாகம் - 2 புள்ளி)

3. அமைப்பு விளக்கம் - 2 புள்ளிகள்
   சுருதி சேர்க்கும் முறை விளக்கம் - 2 புள்ளிகள்

4. வாத்தியத்தின் சிறப்புக்கள் இரண்டு
   எழுதியிருப்பின் - 2 புள்ளிகள்

4. பிரபல்யம் அடைந்த வித்துவான்கள் இருவர் பெயர்
   குறிப்பிடின் - 2 புள்ளிகள்

(1+3+2+2+2+2= 12 புள்ளிகள்)

4) . வாழ்க்கைக்காலம் -17 ம் நூற்றாண்டு எனக் குறிப்பிடின் - 1 புள்ளி
பிறந்த இடம் - சீர்காழி எனக்குறிப்பிடின் - 1 புள்ளி
இளமைக்காலம் - 2 புள்ளிகள்
வாழ்க்கைச்சம்பவங்கள் - 4 புள்ளிகள்
உருப்படிகள் 4 எழுதியிருப்பின் - 2 புள்ளிகள்
சிறப்புக்கள் இரண்டு எழுதியிருப்பின் - 2 புள்ளிகள்

(1+1+2+4+2+2= 12 புள்ளிகள் )

5) 1. அமைப்பு விளக்கம் - 3 புள்ளிகள்
2. வகை - 4 புள்ளிகள்
3. உதாரணங்கள் - 3 புள்ளிகள்
4. இயற்றியவர் - 2 புள்ளிகள்

( 3+4+3+2 = 12 புள்ளிகள் )

6)
1. பகற்பண்கள்
இராப்பண்கள்
பொதுப்பண்கள்
(பொருத்தமான உதராணம் எழுதியிருத்தல் வேண்டும்) ( 3 புள்ளிகள் )

2. அ) மாயாமாளவகௌளை - இந்தளம்
ஆ) மத்தியமாவதி - செந்துருத்தி
இ) யதுகுலகாம்போதி - செவ்வழி
( 3 புள்ளிகள் )

3. பண்ணிசையின் தோற்றம். வளர்ச்சி பற்றி விளக்கியிருப்பின்.
( 6 புள்ளிகள் )

7) 7ஆம் 8 ஆம் நூற்றாண்டுகளின் இசை வளர்ச்சி பற்றிய
விடயங்களை எழுதியிருப்பின் - 12 புள்ளிகள்

அல்லது

ஆதிதாள வர்ணமொன்றின்

ஆரோகண அவரோகணம் எழுதியிருப்பின் - 2 புள்ளிகள்
இயற்றியவர் பெயர் குறிப்பிடின் - 1 புள்ளி
வர்ணத்தின் அங்கங்கள் சரியாக குறிப்பிடின் - 1 புள்ளி
ஸ்வரப்பகுதி தாள அங்க அடையாளங்களுடன்
முழுமையாக எழுதியிருப்பின் - 4 புள்ளிகள்
சாகித்தியப்பகுதியை தாதுவிற்கேற்ப சரியாக
எழுதியிருப்பின் - 4 புள்ளிகள்
( 2+1+1+4++4= 12 புள்ளிகள் )

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**



Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினுடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page